# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.235 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 4 | நாள் | : | 02.01.2025 |
| பெயர் | : | முத்துராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 02nd day of January 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மரத்தோணி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 3 ஐத் தெரியும். இறந்துபோன சங்கரேஸ்வரி என் மூத்த சகோதரி ஆவார். அவரது கணவர் முன்னதாக வெளிநாட்டில் வேலை பார்த்தார். என் அக்கா இறந்தபின்னர் இந்தியா வந்துள்ளார். என் அக்கா வழக்கமாக அ.சா.1 முருகலட்சுமியுடன் ஊரில் ஆடு மேய்த்து கொண்டிருப்பார். 28.07.2018 சனிக்கிழமை சாயங்காலம் கருப்பசாமி என் அக்காவிடம் பாலம்மாள் ஒத்திக்கு பாடுபடும் காட்டுப்பக்கம் ஆடு மேய்த்து கொண்டிருந்தபோது எதிரி புருஷன் வெளிநாட்டில்தான் இருக்கிறான் எல்லோரிடமும் நன்றாக பேசிகிறாய் என்னிடம் ஏன் பேச மறுக்கிறாய் என்று

கூறி தகாத வார்த்தை பேசியுள்ளார். என் சகோதரி ஒழுங்காக போய்விடு என் தம்பி மற்றும் உறவினர்களிடம் கூறிவிடுவேன் என்று சொன்னதும் அங்கிருந்து சென்ற எதிரி பின்னர் சவுக்கு கம்பை எடுத்து வந்து மாலை சுமராக 6 மணி இருக்கும்போது பாலம்மாள் ஒத்திக்காட்டில் வைத்து என் அக்காவை சவுக்கு கம்பால் தலையில் மாறி மாறி அடித்து காயப்படுத்தியுள்ளார். அதை தடுக்கச் சென்ற முருகலட்சுமியையும் ஏண்டி தேவிடியா தடுக்கவா முயற்சிக்கிறாய் என்று கூறி அடித்தபோது அதை முருகலட்சுமி கையால் தடுத்துள்ளார். எனவே முருகலட்சுமிக்கும் இடது கையில் காயம் ஏற்பட்டுள்ளது. என் அக்காவை அடிப்பதை பார்த்து சத்தம் கேட்டு ஆட்கள் வந்ததும் முருகலட்சுமியை பார்த்து ஆட்கள் வந்ததால் நீ தப்பித்துவிட்டாய் இல்லையென்றால் உன்னையும் கொன்றிருப்பேன் என்று கூறி கட்டையை போட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டார். என் தம்பி பாலமுருகன் எனக்கு தகவல் தெரிவித்தார். நான் சென்று பார்த்தபோது என் அக்கா இறந்துகிடந்தார். நாங்கள் பின்னர் சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு சென்றோம். முருகலட்சுமி புகார் கொடுத்தபோது அவர் கணவர் அங்கில்லை. எனவே அறிவை சாட்சி கையெழுத்துபோடும்படி போலீசார் கூறினார்கள். நானும் நடந்த விவரங்களுக்கு கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். பின்னர் மறுநாள் மருத்துவமனையில் வைத்து நடந்த பிரேத விசாரணைக்கு உதவியாக இருந்தேன் அப்போதும் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.01.02 18:05:18 +0530